# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 6 ஜூன் - 2005



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபை


தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701. தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1

2. ஆராதனையில் நாம் வாய்ப்பாட்டை மட்டும் பயன்படுத்துவது ஏன் ? ........ 9

3. பெண்கள் பகுதி ........ 15

4. வாலிபர் பகுதி ........ 19

5. சிறுவர் பகுதி ........ 22

6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25

7. வேதனைக்கு மருந்து வேதம் ........ 30

# THIRUMARAI AASAAN

Published by Church of Christ

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638.701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 18 JUNE - 2005 Issue - 6

ஆசிரியர் உரை

## "மாட்டோம் ... மாட்டோம் ..."

இப்பூவுலக வாழ்க்கையில், அநேக வார்த்தைகளை நாம் அன்றாடம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். அப்படி நாம் கேட்கும் வார்த்தைகளில் பல அடிக்கடி கேட்பவைகளாகவும், சில எப்போதாகிலும் கேட்பவைகளாகவும் இருக்கும். நமது தலைப்பில் இடம் பெற்றிருக்கும் "மாட்டோம்" என்ற வார்த்தை, நாம் அடிக்கடி கேட்கும் வார்த்தைகளின் வரிசையில் ஒருவேளை வராவிட்டாலும் கூட, எப்போதாகிலும் கேட்கும் வார்த்தைகளின் பட்டியலிலாகிலும் கண்டிப்பாக வந்து சேரும். "மாட்டோம்" என்ற இந்த எதிர்மறை வார்த்தைக்கு இந்நாட்களில் பஞ்சமில்லை என்ற நிலை, நமது சமுதாய அமைப்பில் வேகமாக ஏற்பட்டு வருகிறது. ஒரு வேளை, அது குடும்பச் சூழலாக இருந்தாலும், கல்விச்சாலை சூழலாக இருந்தாலும், அலுவலகச் சூழலாக இருந்தாலும், தொழிற்சாலை சூழலாக இருந்தாலும் அல்லது எந்த ஒரு அமைப்புச் சூழலாக இருந்தாலும் இது தான் இன்றைய நாளின் நியதியாக உள்ளது. எப்படியெனில், ஒருவர் கருத்தோடு இன்னொருவர் ஒத்துப்போகாத தன்மையும், மற்றவர் சொல்லி நான் ஏன் கேட்க வேண்டுமென்ற விபரீத எண்ணமும் வெகுவேகமாக வேரூன்றி வருகிறது. இதன் விளைவு தான் எங்கும் வியாபித்திருக்கும் கீழ்ப்படியாமை. கீழ்ப்படிய மனமில்லாததின் விளைவு தான் "மாட்டோம்" அல்லது "முடியாது" என்ற எதிர்மறை பதில்கள்.

சரி, சமுதாயத்தின் மத்தியில் இப்படித் தலைதூக்கி நிற்கும் கீழ்ப்படியாமையும், அதன் விளைவாக எகிறி வரும் **மாட்டோம், முடியாது** போன்ற வார்த்தைகளும், நம்முடைய நாட்களில் தான் தாறுமாறாக அதிகரித்து விட்டது என்று நாம் அநேக சமயங்களில் நினைக்கிறோம். ஏதோ முந்தின தலைமுறை நாட்களில், எல்லோரும்

"கிழித்த கோட்டைத் தாண்டாத" ஒரு வாழ்க்கை வாழ்ந்தது போலவும் எண்ணுகிறோம். அப்படியெல்லாம் நினைத்து, நம்முடைய நிலையை நாம் பெரிதாக நொந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், ஏதேன் தோட்டம் தொடங்கி, மனிதன் இக்காரியத்தில் "இடித்த புளி" போன்று ஒரே இடத்திலேயே நிற்கிறான். தன்னுடைய உடை, உணவு, நாகரீகம், கல்வி, கலாச்சாரம் போன்றவற்றில் மாற்றங்கள் பல கண்ட மனிதன், கீழ்ப்படிதல் காரியத்தில், மாறாதவனாக அல்லது மாற மனமற்றவனாகவே தொடர்ந்து காணப்படுகிறான். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையைத்தான் நாம் எரேமியாவின் நாட்களில் காண்கிறோம்.

புலம்பல் தீர்க்கனாகிய எரேமியாவின் நாட்களில் ஜனங்கள், கீழ்ப்படிய மனமற்றவர்களாக எப்படியெல்லாம் இருந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் உண்மையாகவே ஆச்சரியமாக உள்ளது. கீழ்ப்படிதல் விஷயத்தில், இவ்வளவு கேடான நிலைக்கு கூட ஒருவனால் செல்ல முடியுமா என்று எண்ணத் தோன்றுகிறது. அட மனிதனுக்கு மனிதன் கீழ்ப்படிகிற விஷயத்தில் எப்படி வேண்டுமானாலும் போகட்டும். இரண்டு பேரும் மனிதர்கள். ஆனால், சர்வ வல்ல தேவனுக்குக் கீழ்ப்படிகிற காரியத்திலுமா இப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்ன தான் சொல்வதென்று தெரியவில்லை.

எரேமியாவின் நாட்களில் தெற்கு ராஜ்யமாகிய யூதாவின் நிலை, ஆவிக்குரிய ரீதியில் மிகவும் கேடடைந்து காணப்பட்டது. தன்னுடைய அதீத அக்கிரமச் செயலால் ஏற்கனவே அழிந்து, ஒழிந்து, சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து மறைந்து போன பங்காளியான வடக்கு இராஜ்யத்தைக் காட்டிலும் மோசமாகவும், ஆதியாகமத்தின் நாட்களில் வான பரியந்தம் எட்டின தேவ விரோதச் செயலைச் செய்த சோதோம், கொமோரா பட்டணத்தைக் காட்டிலும் கேடாகவும் இருந்தது (3:11). ஆயினும், இவர்கள் மனந்திரும்புவதற்கான வாய்ப்பை தேவன், தியாகத் தீர்க்கனாகிய எரேமியாவைக் கொண்டு கொடுத்தார். நாற்பது ஆண்டுகள் அவன் எதிர்ப்பு, அடி, உதை, தனிமை, சிறைவாசம் ஆகிய கொடுமைகளைச் சகித்துக் கொண்டு கண்ணீரோடு தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றினான். ஆனால், அவர்களோ மனந்திரும்ப மனமற்றவர்களாக மாத்திரமல்ல, குறைந்தபட்சம் தீர்க்கனின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கக்கூட விருப்பமற்றவர்களாக இருந்தனர்.

அவர்களின் நிலையைக் குறித்து பரலோகத்தின் தேவனும், எரேமியா தீர்க்கனும் எப்படிக் கூறுகிறார்களென்று கொஞ்சம் கவனியுங்கள். "கர்த்தாவே உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றது: அவர்களை அடிக்கிறீர், ஆனாலும் அவர்களுக்கு நோகாது, அவர்களை நிர்மூலமாக்குகிறீர். ஆனாலும், புத்தியை **ஏற்றுக் கொள்ள மாட்டோம்** என்கிறார்கள் ; தங்கள் முகங்களை கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியாக்கி,

**திரும்ப மாட்டோம்** என்கிறார்கள்" (எரே 5:3)

இன்னும் 6 ஆம் அதிகாரத்தில், "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களோ, நாங்கள் அதிலே **நடக்கமாட்டோம்** என்கிறார்கள். நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன். அவர்களோ, நாங்கள் **கேட்க மாட்டோம்** என்கிறார்கள் (6:16,17)

எரேமியா 5,6 ஆகிய இரண்டு அதிகாரங்களில் மாத்திரம் ஓங்கி, ஓங்கி அடிப்பது போல, **மாட்டோம், மாட்டோம்** என்று திரும்பத் திரும்ப நான்கு முறை வருகிறது. எவ்வளவு கடினமான மனது பாருங்கள். தேவன், எரேமியாவை இந்த ஊழியத்திற்கு அனுப்பின போதும், எரேமியா இந்த ஊழியத்தைச் செய்த போதும், ஓர் எதிர்பார்ப்பு இருந்திருக்கும். தன்னுடைய வார்த்தைகளுக்கும், எரேமியாவின் ஊழியத்திற்கும் அவர்கள் சரியாக பதிலளிக்க வேண்டுமென்று எதிர்பார்த்திருப்பார். இப்படி எதிர்பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லை. வைத்தியம் செய்யும் ஒரு மருத்துவன் வியாதி குணமாக வேண்டுமென்று எதிர்பார்ப்பான். பாடம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர், மாணவன் அதைப் புரிந்து அதன்படி செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பார். அது போலத்தான் தேவனும், தன்னுடைய தீர்க்கனைக் கொண்டு சொன்ன வார்த்தைகளுக்குப் பலனை எதிர்பார்த்தார். ஆனால், பலன் ஏதும் கிட்டவில்லை. மாறாக, மாட்டோம், மாட்டோம், மாட்டோம், மாட்டோம் என்ற பதில் தான் கிடைத்தது.

ஆனால், வேதவாக்கியங்களை நாம் கூர்ந்து பார்க்கும் போது, எரேமியாவின் நாட்களிலிருந்த யூதாவின் மக்கள், தேவனின் வார்த்தைகளுக்குச் சரியானபடி செவி கொடுத்து, அவர் எதிர்பார்த்ததைச் செய்திருக்க முடியுமென்றே தெரிகிறது. ஆகவே, அவர்கள் தேவனுக்கு செவி கொடுக்க என்ன வாய்ப்பிருந்தது, என்ன செய்திருக்க வேண்டும், ஆனால், என்ன செய்தார்கள் என்று பார்த்து, அதிலிருந்து நமக்கான சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

## I. *எரேமியாவின் ஜனங்களுக்கிருந்த வாய்ப்புகள்*

புலம்பல் தீர்க்கனாகிய எரேமியாவின் நாட்களிலிருந்த ஜனங்கள், "மாட்டோம்", "மாட்டோம்" எனச் சொல்லி, தேவனுடைய வார்த்தைகளுக்கு எதிர்த்து நிற்காமல், அவருக்குச் செவி கொடுத்திருப்பதற்குச் சாதகமாயிருந்த காரியங்களை முதலாவது பார்ப்போம்.

இரக்கமும், மன உருக்கமுமுள்ள பரலோகத்தின் தேவன், யூதாவின் ஜனங்களைப் பார்த்துச் சொல்லுவதைக் கேளுங்கள். "**வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்லவழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள்**" என்றார். அங்கே தேவன், அவர்களிடத்தில் முடியாத ஒன்றைக் கேட்கவில்லையென்பதை தயவாய்

கவனியுங்கள். ஆதியிலே, ஆதாமுக்கும், ஏவாளுக்கும் கொடுத்த கட்டளை முதல் நீங்கள் கவனித்துப் பார்த்தால், **முடியாத ஒன்றை தேவன் மனிதனிடம் கேட்பதேயில்லை.** உதாரணமாக, எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மோசே விடுவித்து வந்த போது, பார்வோனும், அவன் சேனைகளும் துரத்தி வந்தது. அவர்கள் திரும்பிப் பார்த்து, பார்வோனின் சேனை படுபயங்கரத்துடன் வருவதைக் கண்டு, பயந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள் (யாத் 14:10) அப்பொழுது, "... **பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்** ... என்றான்". (யாத் 14:13) நின்று கொண்டு, தேவன் அருளும் இரட்சிப்பைப் பார்ப்பது முடிகின்ற காரியமா? அல்லது முடியாத காரியமா? இப்படி, ஏராளமான உதாரணங்களை நாம் கொடுக்கலாம்.

இது போலத்தான், யூதாவின் ஜனங்களிடத்திலும் முடிகின்ற காரியங்களே சொல்லப்பட்டது. "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரியுங்கள்" என்று தேவன் அவர்களுக்குச் சொன்ன இந்தக் காரியம் முடிகின்ற காரியமா அல்லது முடியாத காரியமா? முற்பிதாக்களின் காலத்தில் தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்த, தேவ மனிதர்கள் நடந்து சென்ற பாதையைக் கண்டுபிடிப்பது கடினமானதா அல்லது மோசேயைக் கொண்டு தேவன் கொடுத்த கட்டளைகள் என்னவென்று கண்டுபிடிப்பதுதான் சிரமமானதா? இதிலே கடினமானது மில்லை, சிரமமானதும் ஒன்றுமில்லை. எப்படியெனில் அந்தப் பாதைகள் யாத்திராகமம், லேவியராகமம், உபாகமம் போன்ற நூல்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் ஒரு படி மேலே சென்று, அந்தக் கட்டளைகளில் எவைகளின்படி செய்வது ஆசீர்வாதமானதென்றும், எவைகளின் படி செய்வது சாபமானதென்றும் கூட வரையறுக்கப் பட்டிருக்கிறது (உபா 28 அதி) இதற்கு மேல் நம்முடைய தேவன், ஒன்றைக் குறித்து எப்படித்தான் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்?

ஆக, எரேமியாவைக் கொண்டு, தேவன், பூர்வபாதையை விசாரியுங்கள் என்று சொன்ன போது, அப்படி விசாரித்துத் தெரிந்து கொள்வதற்குத் தேவையான சகல வாய்ப்புகளையும் தேவன் தந்திருந்தார். அது போலத் தான், கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னான புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்கின்ற நமக்கும், ஒன்றைச் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிய பின்னரே, இரட்சிப்பு சம்பந்தப்பட்ட காரியத்தைச் செய்யும்படியாகச் சொல்கிறார். முடியாத ஒன்றைச் செய்யச் சொல்லி அவர் நம்மை வருத்தப்படுத்துவதில்லை.

உதாரணமாக, "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" (மத் 4:17) என்று இயேசு சொன்ன போது, மனந்திரும்புவதற்கான அவசியம் மனிதனின் ஆவிக்குரிய வாழ்வில் இருந்ததாலும், அப்படி மனந்திரும்ப அவனால் முடியுமென்பதாலுமே அப்படிச் சொன்னார். முயல்கின்ற ஒருவனுக்கு மனதைத் திருப்புவது

முடியாத ஒன்றல்ல. அதுபோலவே, "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்று கூவி அழைத்த போது (மத் 11:25) பாவ பாரத்தை சுமந்து கொண்டிருக்கும் எல்லோரும் **அவரண்டை வரமுடியும்** என்பதை அறிந்தே அழைத்தார். இன்னும் புகழ்பெற்ற பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தின் இறுதியில், இருதயத்தில் குத்தப்பட்ட மக்கள், "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்ட போது, பேதுரு, **நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்**" என்று ஆவியானவரின் துணை கொண்டு சொன்னான் (அப் 2:37,38). அவன் சொன்ன காரியம், அவர்களால் முடிகின்ற காரியமாக இருந்தபடியால் தான் அன்றைய தினம் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர்.

அருமையானவர்களே, நம்முடைய தேவன் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, மனிதர்கள் மீது எவ்வளவு கரிசனையும், அக்கறையுமுள்ள தேவனாக இருக்கிறாரென்று பாருங்கள். இப்படிப்பட்ட தேவனுக்கு, நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் என்ன கைம்மாறு செய்து கொண்டுள்ளோம்? அவர் இந்நாளில் வாழும் நமக்கு வெளிப்படுத்தியுள்ள புதிய ஏற்பாட்டு உபதேசப்படி வாழ நாம் நம்மை ஒப்புக் கொடுத்திருக்கிறோமா அல்லது மாட்டோம், மாட்டோம் என்று சொல்லுகிறவர்களாக இருக்கிறோமா? சிந்திப்போம்.

## II. *எரேமியாவின் ஜனங்கள் என்ன செய்திருக்க வேண்டும்?*

புலம்பல் தீர்க்கனாகிய எரேமியாவின் நாட்களிலிருந்த ஜனங்கள் மாட்டோம், மாட்டோம் என்று எதிர்த்து நிற்காமல் என்ன செய்திருக்க வேண்டுமென்று இரண்டாவதாகப் பார்ப்போம்.

எரேமியாவைக் கொண்டு தேவன் நடவுங்கள், கேளுங்கள் என்று சொன்னபோது, அவர்கள் அதற்கு அவசர கதியில் பதில் கொடுத்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது. ஏனெனில், எரே 6:8 ம் வசனத்தின் தொனியைப் பாருங்கள். **"எருசலமே, என் ஆத்துமா உன்னை விட்டுப் பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும், குடியற்ற தேசமும் ஆக்காதபடிக்கும் புத்திகேள்"** என்கிறார். வரப்போகும் தண்டனை குறித்து, இதை விடத் தெளிவாக எப்படி எச்சரித்துக் கூறமுடியும்? ஆனாலும், இந்த ஜனங்கள் எதிர்த்து நின்று மாட்டோம், மாட்டோம் என்று பதிலுரைத்தனர். இதைப் போன்ற எச்சரிப்பு, ஒரு கட்டத்தில் நினிவே பட்டணத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. ஆம், "...இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்று கூறினான். (யோனா 3:4). அப்பொழுது அவர்கள் ஒரு கணமும் வீணாக்காமல் எல்லோரும் உபவாசித்து, பெரியோர் முதல், சிறியோர் வரை அனைவரும்

இரட்டுடுத்திக் கொண்டார்கள் (3:5) இரக்கமுள்ள நமது தேவன், அவர்கள் மனந்திரும்புதலைக் கண்டு மனமிரங்கினார். வரப்போகும் தண்டனையிலிருந்து அவர்களைக் காப்பாற்றினார்.

எரேமியாவின் நாட்களிலிருந்த் யூதாவைப் போன்ற மனநிலையைத் தேவன் ஒரு போதும் விரும்புவதில்லை. மாறாக, யோனாவின் நாட்களிலிருந்த ஜனங்களின் மனநிலையையே விரும்புகிறார். அவருடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பதையும், அவருடைய வார்த்தை களுக்குக் கீழ்ப்படிவதையுமே அவர் எதிர்பார்க்கிறார். மீகா தீர்க்கன் கூறும்போது கூட **"உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்"** என்கிறார் (மீகா 6:8)

அருமையானவர்களே, புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் நமக்கும் கூட இதேவிதமான எச்சரிப்பு எபிரெய ஆசிரியரைக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை **மிகுந்த ஜாக்கிரதையாய்க்** கவனிக்க வேண்டும்" என்று. ஜாக்கிரதை என்றாலே எச்சரிப்பு தானே. கேட்டவைகளின் நிமித்தம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமாம். அப்படியானால், எதைக் கேட்டிருக்கிறோம்? எபிரெய ஆசிரியர் என்ன சொல்லுகிறார்? **"பூர்வ காலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்..."** (எபி 1:1,2) என்று கூறுகிறார். அதாவது தேவன், இந்தக் கடைசி நாட்களில், சிலுவைக்குப் பின்னான நாட்களில், **இயேசுவைக் கொண்டு, அவரால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு பேசுகிறார்.** அந்த வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் அடங்கியிருக்கிறது (யோவா 16:13) அப்படியானால், இந்த புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுக்கு நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்பது அவசியம்.

எபிரெய ஆசிரியர் தொடர்ந்து பேசும்போது "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் என்கிறார். கண்டிப்பாகத் தப்பித்துக் கொள்ள முடியாது. எரேமியாவின் காலத்து மக்கள் தண்டனைக்குத் தப்பவில்லை. (எரே. 6:28-30) அதுபோல நாமும் தப்பமுடியாது.

ஆகவே, எரேமியா காலத்து மக்கள், எச்சரிப்பை அற்பமாக எண்ணியது போல், நாமும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும்

எச்சரிப்பை ஏனோதானோ என்று எடுத்துக் கொள்ளாமல், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, இரட்சிப்பை உறுதி செய்து கொள்வோம்.

## III. *எரேமியாவின் ஜனங்கள் என்ன செய்தார்கள்?*

இறுதியாக, புலம்பல் தீர்க்கனாகிய எரேமியாவின் நாட்களிலிருந்த ஜனங்கள், தேவ கட்டளையை எதிர்த்து என்ன செய்தார்கள் என்று பார்ப்போம்.

அந்நாட்களில் இருந்த ஜனங்களின் ஆவிக்குரிய நிலையை 6 ஆம் அதிகாரம் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. தயவு செய்து 6:10 ஐ கவனியுங்கள். "...கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது: அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை". அய்யகோ, தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமான கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாம் ! மிகுந்த சமாதானத்தைக் கொடுக்கிற வசனங்களில் அவர்களுக்குப் பிரியமில்லையாம். இதைவிடக் கொடுமை வேறு என்ன வேண்டும்? இவர்கள் புதிய ஏற்பாட்டில் பவுலடியார் சொல்லுவது போல், **சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்தவர்களாகவே இருந்துள்ளனர்.** (II தீமோ 4:4) இப்படிப்பட்டவர்களால், ஆவிக்குரிய ரீதியாக நாம் என்னதான் கத்திக்கத்தி சொன்னாலும், "மாட்டோம்", "மாட்டோம்" என்பதைத் தவிர வேறு என்ன பதில் தர முடியும்?

இன்றைக்கும் கூட, கிறிஸ்தவ சமுதாயத்தை நாம் உற்று நோக்கும் போது, எரேமியா காலத்து ஜனங்களின் நிலைதான் காணப்படுகிறது. **சத்தியம் நிந்தையான ஒன்றாகவும், சத்தியமார்க்கம் பிரியமற்ற ஒன்றாகவும்** இருக்கிறது. யோவான் 17 ஆம் அதிகாரத்தில் காணப்படும் இயேசுவின் ஜெபத்தில், "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய ,வசனமே சத்தியம்**" என்று கூறுகிறார் (17:17). ஆனால், ஒருவனை விடுதலையாக்கும் வல்லமை கொண்ட சத்தியமாகிய வசனம் இன்றைக்கு அநேகருக்கு நிந்தையாக இருக்கிறது. அத்தேனே பட்டணத்தில் பவுலடியார் செய்த நற்செய்திப் பிரசங்கங்கள் அங்கிருந்த ஞானிகளாகிய எப்பிக்கூரருக்கும், ஸ்தோயிக்கருக்கும் "**நூதனமான காரியம்**" ஆகத் தெரிந்திருக்கிறது (அப் 17:20). ஆம், **தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு வேதவசனங்களின் போதனை என்ன என்று கேட்பதற்கு ஜனங்கள் தயாராக இல்லை.** மாறாக, வசனத்தை விடுத்து, வேறு எதை வேண்டுமானாலும் கேட்கத் தயாராக இருக்கிறார்கள். ஒரு வேளை, அவை சத்தியத்திற்கு சற்றும் சம்பந்தமில்லாத சொந்த அனுபவமாக இருந்தாலும் அல்லது அவன் வசனத்தைத் திரித்துச் சொல்லும் கட்டுக்கதையாக இருந்தாலும் அல்லது அவன் கள்ள உபதேசத்தால் வஞ்சிக்கப்பட்டதின் நிமித்தமாகச் சொல்லும் பொய்ச்சாட்சியாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. சொல், சொல் என்று தங்கள் காதுகளை அகலமாக்கிக் கேட்கிறார்கள்.

ஆனால், நாம் இதுதான் சத்தியம் என்று சொல்லும்போது முகம் சுளிக்கிறார்கள். இரட்சிப்படைவதற்கான வழி இதுதான் என்று விவரிக்கும் போது, இல்லையில்லை "இதுவும் சரிதான்" என்று தங்கள் தவறான நிலைப்பாட்டை நியாயப்படுத்துகிறார்கள். **"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்"** (யோவா 14:6) என்று இயேசு ஒரேவழியைக் குறித்து ஆணித்தரமாகச் சொல்லியிருக்கும்போது, இயேசுவின் பேரால் ஆயிரம் வழிகள் இருக்கிறதென்று ஆளாளுக்கு ஒவ்வொரு வழியைக் காட்டி, அதற்கென ஆங்காங்கே ஒரு கூட்டத்தையும் கூட்டி, சமுதாயத்தின் மத்தியில் கிறிஸ்தவத்தைக் கூறுபோட்டு, கிறிஸ்துவின் நாமத்தை நிந்தையாக்குகிறார்கள். இவர்களிடம் சென்று, இயேசு வாக்குத்தத்தம் செய்து கட்டின சபை ஒன்று தான் (மத் (16:18), அவரைப் பின்பற்றுபவர்கள் எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்று தான் அவர் இறுதியாக ஜெபித்தார். (யோவான் 17:21) என்று சொன்னால், நம்மை ஏளனமாகப் பார்க்கிறார்கள். ஐயா, அம்மா, நண்பரே, இந்தக் காரியத்தைச் சத்தியத்தினிமித்தம் நீங்கள் செய்து தான் ஆக வேண்டுமென்றும், இச்செயலை நீங்கள் விடுவதுதான் சரியென்றும் கூறினால், எரேமியா காலத்து மக்கள் போலவே, கொஞ்சமும் இருதய இளக்கமின்றி "மாட்டோம், மாட்டோம்" என்கிறார்கள். இவர்களின் நித்திய நிலையை எண்ணிப்பார்த்தால் பரிதாபமாக உள்ளது.

அன்பானவர்களே, எரேமியா காலத்து நிலை இன்றைக்கு அப்படியே பிரதிபலிப்பது உங்களுக்கு விளங்குகிறதா இல்லையா?. **"திகைத்து திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள், ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள். இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது ; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? என்கிறான்** (எரே 5:30,31) ஆனால் முடிவைப் பற்றி எரேமியா காலத்து ஜனங்களும் கவலைப்படவில்லை; இன்றைய கிறிஸ்தவமும் கவலைப்படுவது போலத் தெரியவில்லை. ஆனால், நாம் கவலைப்படுகிறோமோ இல்லையோ, முடிவு உண்டு (I கொரி 15:24) **இதோ சீக்கிரமாய் வருகிறேன்** என்று வெளிப்படுத்தல் இறுதி அதிகாரத்தில் மாத்திரம் 3 முறை இடம் பெற்றுள்ளது. ஆகையால், வாக்கு மாறாத நம்முடைய இரட்சகர் வருவது உறுதி. தயவு செய்து யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

அவர் வரும் கடைசி நாளில், **இன்றைக்கு அநேகருக்கு நிந்தையாகவும், பிரியமற்றதாகவும் இருக்கும், அவர் சொன்ன வசனம் தான் நியாயந்தீர்க்கப் போகிறது.** (யோவா 12:48) ஆகவே, நாம் இன்னும் "மாட்டோம், மாட்டோம்" என்று சொல்லி சத்திய வார்த்தைகளுக்கு எதிர்த்து நின்று தேவ கோபத்திற்கு ஆளாகாமல் வேதவசனங்களுக்கு நம்மை ஒப்புக் கொடுத்து நித்திய மீட்பை உறுதி செய்து கொள்வோம். ஆமென் !

**S. Rajanayagam**

# ஆராதனையில் நாம் வாய்ப்பாட்டை மட்டும் பயன்படுத்துவது ஏன்?

நமது ஆராதனையில் நாம் தேவனை துதித்து வாயினால் மட்டும் பாடுகிறோம். இசைக்கருவிகளை பயன்படுத்துவதில்லை. இந்த விஷயத்தில் மற்ற பிரிவினை சபையாரிடமிருந்து நாம் வேறுபடுகிறோம். நாம் இசைக்கருவிகளை பயன்படுத்தாமல் வேறுபட்டிருப்பது ஏதோ மற்றவர்களிடமிருந்து நாம் வேறுபட்டிருக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக அல்ல. மாறாக நமது ஆராதனையில் குரல் வழி பாடலை மாத்திரமே வைத்திருக்கிறோம். ஏனென்றால், வேதாகமம் நமக்கு அப்படித்தான் கட்டளையிடுகிறது.

இசையில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று வாய்ப்பாட்டு ; இரண்டு இசைக்கருவிகளால் எழுப்பப்படும் இசை. வாய்ப்பாட்டு என்பது, மனித குரல்களை ஒன்றாக வைத்து இசைந்து பாடுவதும் அழகிய பல குரல் சேர்ந்தாலும், ஒரே குரலைப் போல இசைந்து பிறக்கக்கூடியது தான் வாய்ப்பாட்டு இசை. தேவனுடைய சிருஷ்டிப்பாகிய மனிதனிடமிருந்து இந்த இசை வருகிறது. மனிதன் தனது ஆத்துமாவின் ஆழத்திலிருந்து தேவனை துதித்துப்பாடுகிறான். தனது சிருஷ்டிகரை தனது ஆவியோடும் அல்லது ஆத்துமாவோடும் பாடுகிறான். அதே சமயத்தில் இசைக்கருவியினால் எழுப்பப்படும் சத்தமோ மனிதனால் உண்டாக்கப்பட்ட இசை கருவியிலிருந்து வருகிறது. அந்த கருவிகளுக்கு ஜீவனில்லை. அவைகளுக்கு ஆவியோ அல்லது ஆன்மாவோயில்லை. அது சத்தத்தை எழுப்ப ஒரே காரணம், மனிதன் அதில் எப்படி மீட்டுகிறான், இசைக்கிறான், வாசிக்கிறான் என்பதை அடிப்படையாக கொண்டுதான். கேள்வி இதுதான்? தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பு தன்னை துதிக்க வேண்டுமென்று எண்ணுவாரா? அல்லது மனிதனின் படைப்பு தன்னை துதிக்க வேண்டுமென்று எண்ணுவாரா? எது அவருக்குப் பிரியமானதாயிருக்கும்? எபிரெய ஆசிரியர் சொல்கிறார், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி 13:15) என்று கவனியுங்கள், நமது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியின் மூலமாய் நாம் தேவனுக்கு துதிகளை ஏறெடுக்க வேண்டும். நமது உதடுகளின் கனி என்றால் அது என்னவாயிருக்கும்? அது நமது பேச்சாகவோ, நமது பாடலாகவோ, நமது ஜெபமாகவோ, நமது துதியின் வார்த்தைகளாகவோ இருக்க முடியும். இது யாருக்கு நேராக ஏறெடுக்கப்படும்? தேவனுக்கு நேராகத்தான்.

நமது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியைக் குறித்து பேசிக்கொண்டிருக்கும் பவுல் சொல்லுகிறார். "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரை பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" என்கிறார். (எபே 5:19,20) தயவு செய்து கவனியுங்கள், இங்கே ஒருவருக்கொருவர் பாடி புத்திசொல்லி பேசவேண்டும் என்கிறது. அதாவது பலவிதமான பாடல்களால் நாம் அப்படிச் செய்ய வேண்டும். அந்தப் பாடல்கள் எல்லாம் பக்தியானதாகவும், வசனத்தின்படியானதாகவும் இருக்க வேண்டுமென்கிறது. இறுதியாக நாம் பார்க்கிறோம், இந்த பாடலை நாம் பாடும்போது ஏதோ ஒரு இசைக்கருவியைக் கொண்டு பாடாமல் நமது இதயத்தில் பாட வேண்டும் என்கிறது. கிறிஸ்தவர்கள் ஆராதனையில் ஒரு பங்காக பாடல் பாடி மாத்திரம் செய்து தேவனை ஆராதிக்க முடியுமா? ஆம் என்று தான் நாம் சொல்ல வேண்டும். ஆனால் பாடலோடு, இசைக்கருவியும் சேர்ந்து வருவதை பற்றி எப்படி? வேதாகமம் அப்படிப் போதித்தால் அது சரியாக இருக்கும். ஆனால் புதிய ஏற்பாடு நமக்கு அப்படி கட்டளையிடவில்லை. நாம் கட்டளையிடாத ஒன்றைச் செய்தால் கர்த்தரின் சித்தத்தோடு கூட்டுகிறோம் அல்லவா?

மீண்டும் பவுல் சொல்லுகிறார், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி ;" (கொலோ 3:16) இப்பொழுது பவுல் இங்கே என்ன சொல்கிறார்? கிறிஸ்துவின் வசனம், போதனை, புத்தி சொல்லுதல், ஆவிக்குரிய மற்றும் வேதவாக்கியத்தின்படியான பாடல்களில் மூலமாக தேவனை துதிப்பதினாலே வாசமாயிருக்க வேண்டும் என்று சொல்கிறார். இது உண்மையாக இருக்கிறது, அப்படி இருக்கையில் இசைக்கருவிகள் பற்றி பவுல் ஏதேனும் பேசுவதை நீங்கள் பார்க்கிறீர்களா? அப்படியில்லை என்றால், பாடலிலே இசைக்கருவிகளை சேர்ப்பது தேவனுடைய வார்த்தையோடு கூட்டுதல் என்றுதானே பொருள்?

ஆனால், நீங்கள் சொல்லலாம். இதில் ஒன்றும் தவறு இருப்பதாக தெரியவில்லையே என்று, மற்றவர் வந்து எனக்கு அதில் தவறு இருப்பதாக தெரியவில்லை என்று வேறொரு காரியத்தைப் பற்றி சொல்லலாம். இப்படியே பட்டியல் நீண்டு கொண்டு போகும். ஆகையால் இங்கு, நான் சொல்லவரும் கருத்து யாதெனில், தேவனுடைய வார்த்தை என்ன போதிக்கிறதோ அதை மாத்திரம் நாம் செய்ய வேண்டும் என்பதே.

நீங்கள் இப்படிக் கூடச் சொல்லலாம், "எனக்கு இது பிடித்திருக்கிறது" என்று. அல்லது இசைக்கருவியை வாசிக்கும் திறமை படைத்தவர்களைப் பற்றி என்ன என்று சொல்லலாம்? அவர்கள் இசைக்கருவிகளை வாசிப்பதின் மூலம் தேவன் மகிமைப்படமாட்டாரா? ஆனால், மீண்டுமாக பார்க்கையில், எனக்கு என்ன பிடிக்கும் என்பது முக்கியமல்ல. தேவன் எதை விரும்புகிறார் என்பது தான் காரியம். இசைக்கருவிகளை வாசிக்கும் தாலந்து உடையவர்கள், தேவனுக்கு மகிமை சேர்க்க ஆராதனையில் அதை நாம் சேர்க்க வேண்டுமென்றால், மற்ற அதீத திறமை உள்ளவர்களைப்பற்றி என்ன, அவர்களும் தங்களின் தாலந்துகளினாலே தேவனை மகிமைப்படுத்த அவைகளையும் ஆராதனையில் சேர்க்கலாமா? இங்கு கூறப்படும் விஷயத்தின் கருத்தை நீங்கள் புரிந்து கொள்ளுவீர்கள் என நம்புகிறோம்.

நமது வீடுகளிலே இசைக்கருவிகளால் எழுப்பப்படும் இசைகளை கேட்டோமானால், அதை ஆராதனையில் பயன்படுத்துவதில் என்ன தவறு என்று சிலர் கேட்கலாம். உண்மை யாதெனில், வீட்டிலே அநேக காரியங்கள் உண்டு. அவைகளை எல்லாம் நாம் ஆராதனைக்குள் எடுத்துச் செல்ல முடியாது. எனக்கும், என் குடும்பத்திற்கும் இசை மிகவும் பிடிக்கும், தரம் மிகுந்த இசையை நாங்கள் வீட்டிலே கேட்டதுண்டு. ஆனால் ஆராதனை என்று வரும் போது எங்கள் விருப்பத்தை ஒரு புறமாக வைத்து விட்டு, தேவனுக்கு பிரியமாக நடந்து கொள்ள முயற்சிப்போம். நாம் நமது வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடலாம், டீ குடிக்கலாம். இவையெல்லாம் நமக்கு பிடிக்கும் என்பதாலே அவைகளை ஆராதனையில் நாம் சேர்க்க முடியுமா?

இன்னும் சிலர் இப்படியாக கூறுவார்கள், பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்த வில்லையா என்பார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் பழைய ஏற்பாடு நம்மை இப்பொழுது கட்டுப்படுத்தாது. ஏன் என்றால் முதலாவது அது நமக்கென்று கொடுக்கப்படவில்லை (உபா.5:1-5) இரண்டாவது கிறிஸ்து அதை நடுவிலிராதபடி சிலுவையில் (ஆணியடித்து) அறைந்து விட்டார். நாம் வாசிக்கிறோம், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின என்று (யோவா 1:17). இயேசு சொன்னார், நியாயப்பிரமாணம் நிறைவேறும் அளவும் அது அழிந்து போகாதென்று (மத் 5:17,18) கிறிஸ்து சிலுவையில் மரித்த போது அதை நிறைவேற்றினார். அந்த பழைய பிரமாணத்தை ஆணியடித்து முடித்து வைத்தார். (கொலோ 2:14) ஆகவே, சங்கீதத்தையோ, வேறு எந்த பழைய

ஏற்பாட்டு நூலையோ பயன்படுத்தி நாம் ஆராதனையில் இசைக்கருவி வாசிப்பது சரிதான் என்று சொல்ல முடியாது.

இன்னும் சிலர், பரலோகத்திலே இசைக்கருவிகள் வாசிக்கப்படும். ஆகையால், நாம் ஆராதனையில் அதை பயன்படுத்துவதில் என்ன தவறு என்பார்கள். அவர்கள் நினைவெல்லாம், பரலோகத்தில் இசைக்கருவிகள் இருந்தால், பூமியிலே நாம் அதை பயன்படுத்தலாம் என்பது தான். ஆனால், வெளிப்படுத்தலிலோ அல்லது வேறு எந்த புத்தகத்தில் நாம் மனிதனால் உண்டாக்கப்பட்டிருக்கிற இசைக்கருவி பரலோகத்தில் இருக்கிறது என்று காண்கிறோம்? அப்படியே பரலோகத்தில் இசை இருந்தாலும், நாம் பூலோகத்தில் அதை வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு அது நமக்கு அதிகாரத்தைத் தராது. பரலோகத்தில் இருக்கும் அநேக காரியங்களை நாம் இங்கு நமது ஆராதனையில் வைத்துக் கொள்ள முடியாது. ஆராதனையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதும், பரலோகத்தில் என்ன இருக்கிறது என்பதும் இரண்டு வெவ்வேறான காரியங்கள்.

வேத அறிஞர்களும், மார்க்கத் தலைவர்களும் முதல் நூற்றாண்டில் இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டதற்கு எந்த அடையாளமுமில்லை என்பதை பகிரங்கமாகவே ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு வேதாகமத்திலும் எந்த ஆதாரமுமில்லை. பிற சரித்திரத்திலும் எந்த ஆதாரமுமில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்தியது காலப்போக்கில் வந்ததே ஒழிய, அது ஆதித் திருச்சபையில் இருக்கவில்லை. உதாரணமாக, ரோமக் கத்தோலிக்க திருச்சபை, பிளவுபட்டதை நாம் அறிவோம், அதற்கு பல காரணங்கள் உண்டு, அதில் ஒன்று, இசைக்கருவிகளை நாம் ஆராதனையில் பயன்படுத்தலாமா? என்பதின் அடிப்படையில் வந்ததுதான். பயன்படுத்தலாம் என்று சொன்னது ரோமக் கத்தோலிக்க சபையாகவும், இல்லை கூடாது என்று சொன்னது கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபையாகவும் விளங்கிற்று. கத்தோலிக்கர்கள் இந்நாள் வரைக்கும் அதை பயன்படுத்துகிறார்கள். கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபையார் இந்நாள் வரையும் அதை பயன்படுத்துவதில்லை. அதற்கு பின்பாக மீட்டமைத்தல் மற்றும் பிரட்டெஸ்டன்ட் இயக்கங்களில் எழுந்த மார்டின் லூத்தர், ஜான் வெஸ்லி போன்றவர்களும் தேவன் தனது பரிசுத்த வார்த்தையில் எழுதிக் கொடுக்காத எந்த விஷயத்தையும் அவரை ஆராதிப்பதில் சேர்க்கக் கூடாது என்றனர்.

கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நாம் திரும்பினால், நாம் அநேக வேத வசனத்தை வாசிக்க வேண்டியதிருக்கிறது. கர்த்தருடைய பந்திக்கு பிறகு நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும், அவருடைய

சீஷர்கள் பற்றியும் கூறுகையில், "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டு போனார்கள்" (மத் 26:30) பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, கால்கள் தொழு மரத்தில் மாட்டி வைக்கப்பட்ட போது, வேதம் சொல்லுகிறது, "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்" (அப். 16:25) பவுல், கொரிந்து சபையாருக்கு எழுகையில், "என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (கொரி 14:14,15) என்கிறார். யாக்கோபு கூறுகையில், "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். (யாக்கோபு 5:13). வெளிப்படுதல் நூலில் பாடல் சம்பந்தமாக அநேக வசனங்கள் இருக்கிறது," தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள். (வெளி 5:9,10)

"அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி 15:3). நாம் ஏற்கனவே சொன்னது போல, யோவான் பரலோக தரிசனத்தில் எப்படிக் கேட்டார் என்பதைக் கூறுகிறது, "அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்" (வெளி 14:2) தொடர்ந்து நாம் அதே வசனத்தை வாசிக்கையில், "நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது" (வெளி 14:2) என்கிறார். வெளிப்படுத்தல் நூலில், தான் பரலோகத்தில் எப்படிப்பட்ட சத்தம் போட்டேன் என்பதை மனிதர்கள் புரிந்து கொள்ள அநேக உவமைகளை கூறினார் யோவான்.

ஆகவே தான், பெருவெள்ளத்தின் இரைச்சல், இடிமுழக்கம், சுரமண்டலம் என்று கூறுகிறார். அவைகள் எல்லாம் அப்படியே பரலோகத்தில் இருக்கிறதாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது. இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்துவது என்பது அதிகாரம் சம்பந்தமானது. வேதாகமம் எங்கு பேசுகிறதோ, அங்கு நாம் பேச வேண்டும், வேதம் எங்கு அமைதலாக இருக்கிறதோ அங்கு நாமும் அமைதலாக இருப்பது நல்லதா? தேவன் சொல்லாத ஒன்றை செய்வது நல்லதா? இயேசு கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் அவர் சொல்படி கேட்டுத்தான் நடக்க வேண்டும். ஆதலால் இசைக்கருவிகளை பயன்படுத்தாமல் இருப்பதின் மூலமாகத்தான் நாம் தேவனுக்கு பிரியமாக இருக்க முடியும்.

தேவனை நீங்கள் எப்படி ஆராதித்து வருகிறீர்கள்? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படியில்லை என்றால் நீங்கள் மாற வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இயேசு சொன்னார், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான்" என்று (மாற்கு 16:16) அதன் பின்பாக கர்த்தர் இரட்சிக்கப்பட்டவர்களை தமது சபையிலே சேர்த்துக் கொண்டு வருகிறார் (அப். 2:47) இரட்சிக்கப்பட்ட நீங்கள் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளலாம். நீங்கள் இப்படி செய்ய தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென்!

**J.C. CHOATE** **J.C. சோட்**

**சபை**

- **சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனமல்ல. [எபே. 3:10,11]**
- **சபை குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமானதல்ல. [மாற். 16:15,16]**
- **சபை சமூக நிலையை உயர்த்துவதற்கான ஸ்தாபனமல்ல. [மத். 25:31-46]**
- **சபை ஒரு மார்க்க பிரிவினைக் கூட்டமல்ல. [அப். 20:29,30]**
- **சபை தனக்கு சொந்த பிரமாணத்தை அளிக்கக்கூடியதல்ல. [யாக். 4:12]**

பெண்கள் பகுதி

# "இழந்து போன தாய்மார்கள்"

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, இம்மாதம் உங்களோடு கூட இத்தலைப்பின் கீழ் சில பாடங்களை கற்றுக்கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். "இழந்து போன தாய்மார்கள்" என்று சொல்லும்போது, ஏதோ இப்பூமியை விட்டு கடந்து சென்றவர்கள் பற்றி நாம் பார்க்கப் போவதில்லை.

யாராவது ஒருவர் தவறு செய்து விட்டார்கள் என்று கேள்விப்படும் போது வேதனையாக இருக்கும். ஆனால், ஒரு தாய் அதற்கு காரணமாயிருக்கிறார்கள் என்றால் அது இன்னும் அதிகமான வேதனையை உண்டாக்கும். ஆண்கள் தவறு செய்யாமலில்லை, ஆனால், தாய் ஒருத்தி அதில் ஈடுபடும் போது தான் அது மோசமாகி விடுகிறது. நமக்குத் தெரியும் தேவனுடைய பார்வையில் பாவம் என்றால் பாவம் தான். தாய்மார்கள் தவறிழைக்கிறார்களென்றால், ஏதோ அவர்கள் விபச்சாரம், பொய், திருட்டு, ஏமாற்று போன்றவைகளை செய்ய வேண்டியதில்லை. தேவன் பெண்களை என்ன செய்ய வேண்டும்?, எப்படியிருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரோ அப்படி செய்யாமற் போனாலே **இழந்து போனவர்கள்தான்.** எவ்வாறெல்லாம் ஒரு தாய் தன்னை இழந்து போக நேரிடுகிறதென்று பார்ப்போம்.

## I. *<u>சில தாய்மார்கள் குடும்பத்தை இழந்துள்ளனர்</u>*

வேதாகமத்தில் எங்கு தேடிப் படித்தாலும் ஒரு பெண் தன் செல்வாக்கை செலுத்தக்கூடிய முதல் இடம் குடும்பம் தான் என்ற முடிவை எல்லோரும் ஒத்துக்கொண்டேயாக வேண்டும். தேவன் உண்டாக்கிய முதல் குடும்பமே பெண்ணை உருவாக்கிய பிறகு தான் முழுமை அடைந்தது. ஏற்ற துணையாக இருக்கும்படியாக அவள் உண்டாக்கப்பட்டாள். தீத்துவுக்கு எழுதின 2 ஆம் அதிகாரம் 1-5 வசனங்களில் பெண்ணையும், குடும்பத்தையும் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கியுள்ளார். பெண்ணானவள் வீட்டில் தரித்திருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். முன்னேற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் வேலையின் நிமித்தமாகவும், மற்ற காரியங்கள் நிமுத்தமும் பெண்கள் வீட்டில் இருப்பது தடைபட்டு விடுகிறது. ஒரு தாய் வீட்டில் இல்லாத பட்சத்தில் ஏதாவது அவசர, அவசிய நேரங்களில் யாருமே வீட்டில்

இருப்பதில்லை. பிள்ளைகள் தங்களுக்கு பொறுப்பு தாங்களே என்ற நிலை உருவாகி விடுகிறது. பிறகு இது பல சமுதாய பிரச்சினைகளுக்கு காரணமாகி விடுகிறது. குழந்தைகளின் வாழ்க்கையை உருவாக்கும் பொறுப்பு தாயின் கையில் உள்ளது. தாயும், குடும்பமும் பிரிக்கப்படலாகாது.

## II. ***சில தாய்மார்கள் எண்ணத்திலும், சரீரத்திலும் பரிசுத்தத்தை இழந்திருக்கிறார்கள் :***

இயேசுவின் தாயாகிய மரியாளைப் பார்ப்போம். அவர்களைப் பற்றி நாம் பெரியளவில் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினாலும் வேதாகமம் மிகக் குறைந்தளவே மரியாளைப் பற்றி பேசுகிறது. "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று லூக்கா 1:42-ல் நாம் வாசிக்கிறோம். அவள் இவ்வளவு பெரிதாகப் பேசப்படுவதற்கு அவள் என்ன தகுதி பெற்றிருந்தாள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவள் தன் சரீரத்திலும், எண்ணத்திலும் பரிசுத்தமாயிருந்தாள் என்பது நம் அனைவருக்கும் விளங்காமல் இருக்காது. அவள் அவ்வாறு பரிசுத்தமாயிருந்திராவிட்டால், இயேசுவின் தாயாவதற்கு தெரிந்து கொள்ளப்பட்டிருக்க மாட்டாள். சில நேரங்களில் பாவம் சில தாய்மார்களை பரிசுத்தத்திலிருந்து விலக்கி விடுகிறது. கருக்கலைப்பு, சமுதாய வியாதிகள் போன்ற காரணங்களால் பரிசுத்தத்தை இழந்து விடுகின்றனர். முதல் நூற்றாண்டு சபையில் வாழ்ந்த கிறிஸ்தவப் பெண்கள் ஆடையலங்காரத்தைக் காட்டிலும் குணத்திற்கு முக்கியம் கொடுப்பதில் கவனமாயிருந்தார்கள். (I பேது : 3:5,6) அலங்காரமான ஆடை உடுத்துவது, தயாரிப்பது போன்றவைகளே வேண்டாம் என்று இங்கு பேதுரு குறிப்பிடவில்லை. மாறாக, அதிலேயே நாட்டம் வைத்து அதற்கே முதலிடம் கொடுக்கக்கூடாது. உலகத்திலே நம்பிக்கையாயிருப்பவர்கள் உலகத்தைப் பிரியப்படுத்தப் பார்ப்பார்கள். தேவன் மீது நம்பிக்கையாயிருக்கிற தாய்மார்கள் தேவனை பிரியப்படுத்த பிரயாசப்படுவார்கள்.

## III. ***சில தாய்மார்கள் தாங்கள் தாய்மையடைந்ததின் நோக்கத்தை இழந்து விடுகின்றனர் :-***

அன்னாள் தான் கர்த்தரால் கிடைக்கப்பெற்ற தன் பிள்ளை யாண்டானை அவருக்கே கொடுப்பேன் என்று கொடுத்து விட்டாள். ஒவ்வொரு கிறிஸ்தவத் தாயின் நோக்கமாக இது இருக்க வேண்டும். பரலோகத்திற்கு தகுதியாகும்படியாக நம் பிள்ளைகளை வளர்ப்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும். தன் குழந்தையை ஒரு தலைசிறந்த

நிபுணராகவோ, கை நிறைய சம்பாதிக்கும் ஒருவனாகவோ ஆக்குவதை விட கர்த்தருடைய நாமத்திற்காக வளர்த்துவதே தேவனுக்கு நாம் செய்யும் நன்றியாகும். முதலாவது நம் குழந்தைகளை தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். இரண்டாவது தான் உலகக்கல்வி, வேலை இவைகள் இருக்க வேண்டும்.

## IV. *சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ பிள்ளையாகப் பார்த்து திருமணம் செய்து கொடுப்பதில் தங்களை இழந்து விடுகின்றனர் :-*

இன்றைக்கு கிறிஸ்தவத் தாய்மார்கள் தன் பிள்ளைகள் கிறிஸ்தவ பையன்களையே மணந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவது அவசியமாய் இருக்கிறது. சபைக்கு வெளியே இருக்கும் பிள்ளைகளை விவாகம் செய்வது மனதுக்கு நோவையும், சஞ்சலத்தையுமே குடும்பத்திற்குள் கொண்டுவருகிறது. ஆவிக்குரிய ஜீவியம் எப்படியிருக்கிறதென்று பாராமல் வசதி, சொத்து, படிப்பு இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் இழப்பதோடு தாங்களும் இழந்தவர்களாக பெற்றோர்கள் காணப்படும் நிலை ஏற்பட்டு விடுகிறது. சபையில் இருக்கிற பரிசுத்தவான்களே திருமண காரியங்களில் உலகத்தோடு உலகமாக மாறிவிடுகிறார்கள். வேதம் இதற்கு என்ன கூறுகிறதென்று பார்ப்போம், "**அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?**" (II கொரி 6:14,15) எனவே திருமணம் என்று வரும்போது தாய்மார்களே, நாம் நம்மை இழந்து போக வேண்டாம்.

## V. *சில தாய்மார்கள் தங்கள் கணவன்மார்களை தங்கள் குடும்பத்திற்கு தலைவராக இருக்க விடாமல் தாங்களே தலைமை பொறுப்பேற்று நடப்பதின் மூலம் தங்களை இழந்து விடுகின்றனர் :-*

நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும் சாராள் - ஒரு தாய். "**அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் ...**" (I பேதுரு 3:6) நாமும் சாராளைப் போல் கீழ்ப்படிந்திருப்போம். மேலும் மனைவிகளே, கர்த்தருக்கு கீழ்ப்படிவது போல, உங்கள் சொந்தப் புருஷனுக்குக் கீழ்ப்படியுங்கள்.

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்" என்று எபேசியர் 5:22,23 ஆகிய வசனங்கள் நமக்கு போதிக்கிறது. இன்றைக்கு பெரும்பாலான கிறிஸ்தவக் குடும்பங்களில் இதற்கு மாறான பரிதாப நிலை காணப்படுகிறது. ஆண் தலைமைப் பொறுப்பை ஏற்க விடாமல் பெண்களே தலைமை ஏற்று ஆண்களை ஆண்டு கொண்டுள்ளனர். வசனத்தின்படி இது தவறு. இதுவும் பாவம் தான். பெண் ஆளுகை செய்யும் குடும்பங்களில் தகப்பனுக்கு அங்கே மரியாதையே இருக்காது. பிள்ளைகள் தகப்பனில் அன்பு கூரவும் முடியாது. மதிக்கவும் மாட்டார்கள். இந்தச் செயலின் மூலம் தாய்மார்கள் தங்களை இழந்து விடுகின்றார்.

ஆகவே, பிரியமான தாய்மார்களே, நாம் நம்மை மேற்கண்ட காரியங்களினால் இழந்து விடாமல் வசனம் சொல்லும் ஆலோசனைப்படி வாழ்வோம். நாளைய சபை இன்றைய தாய்மார்களின் கையில் உள்ளது. சபையில் பிரிவினைகள் வருவதற்கும் தாய்மார்கள் தங்களை இழந்துவிடுவது தான் காரணம். குடும்பத்தில் **"ஆவிக்குரிய பயிற்சியை கடுமையாக மேற்கொண்டால்"** தவறுகள் நேரிடாமல் எதிர்காலத்தில் திடமான சபையை ஏற்படுத்தலாம். அன்னாள் தன் பிள்ளையை பால் மறக்கப் பண்ணும் மட்டும் தான் தன்னோடு வைத்துக் கொண்டாள். நாமும் நம் பிள்ளைகளை கர்த்தருக்காக ஒப்புக் கொடுத்தால், விலைமதிக்க முடியாத சாமுவேல்களாக திகழ்வார்கள். தேவன் அவ்வாறு செய்வதற்கு நமக்கு பலனையும், விசுவாசத்தையும் கட்டளையிடுவாராக ! ஆமென் !!

**- ரேச்சல் ராஜநாயகம்**

**சுவிசேஷம் பூரணமானது ஏன்?**

- **பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது. யோவான் 14 & 16**
- **கடைசி நாட்களில் அது நம்மை நியாயந்தீர்க்கும். யோவான் 12:48**
- **ஜீவனுக்கும் தேவபக்திக்கும் தேவையான அனைத்தும் அதிலிருக்கிறது. 2 பேதுரு 1:3**
- **அத்தோடு ஒன்றையும் கூட்டக்கூடாது. யூதா 3; வெளி 21:18,19**
- **அது ஒழிந்து போகாது. மத். 5:18**

வாலிபர் பகுதி

# சோதித்துப் பாருங்கள்

ஆதாம் செய்த மீறுதலினால் மனிதகுலம் மீளாத்துயருக்கு ஆளானது என்றுரைத்தால் அது மிகையன்று, மனிதவர்க்கம் பாவமென்னும் மாசுபடிந்து பாவ சுமையினால் முதுகொடிந்து நிற்கையில் நம் துயர்துடைக்க, மாசு போக்க, பாவ சுமை இறக்க, இயேசு விண்ணகம் துறக்க வேண்டியதாயிருந்தது. மண்ணகம் செழிக்க வந்தவர் தன் செங்குருதி சிந்தி, நமது மீட்புக்கு வழிவகுத்தார். தன் இன்னுயிரையே ஈந்த நமது ஆண்டவரின் தியாகத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அந்த தியாகச் செம்மலின் தூயத்திரு நாமத்தால் உங்களை வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

ஒன்றை நாம் சோதித்துப் பார்க்க வேண்டுமென்றால், நாம் எதை சோதிக்கிறோமோ அதில் போதிய அறிவு ஒருவனுக்கிருக்க வேண்டுமென்பதை என்னோடு நீங்களும் ஒப்புக்கொள்ளுவீர்கள் என்பதில் எனக்கேதும் ஐயமில்லை. சவுலாயிருந்து சபையை துன்பப்படுத்தியவன் சாலையில் சடிதியில் இயேசுவை சந்தித்ததால் சிந்தை தெளிந்து, விந்தை நாதரை வீதிகள் தோறும் பிரசங்கித்தான். பவுல் என்று அழைக்கப்பட்ட அவன் எபேசுவிலுள்ள சபைக்கு நிருபம் வடிக்கையில், **"கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்"** என்கிறார். (எபே.5:10) சோதித்துப் பார்க்க பிரியப்படும் பருவமாகிய இளமைப்பருவத்திலிருக்கும் நீங்கள் துரிதமாய் காரியத்தில் இறங்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு இம்முயற்சி செய்கிறேன்.

## தேவனுக்குப் பிரியமானது

தேவனுக்குப் பிரியமானது என்னவென்று நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால், அவரை அறிந்த ஒருவர் அதை நமக்கு சொல்ல வேண்டும், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதுகையில், **"... அப்படிப் போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்கு உரியவைகளை அறியமாட்டான்"** (I கொரி 2:11) என்கிறார். தேவ ஆவியானவர், பிதாவின் சித்தம் இன்னதென்று வேதாகமத்தில், குறிப்பாக புதிய ஏற்பாட்டில் நமக்கு விளம்பியிருக்கிறார். ஆகவே, நாம் வேதத்திற்கு சென்று தேவனுக்குப் பிரியமானது என்னவென்று தியானிப்பதுவே சாலச் சிறந்ததாகும்.

**முதலாவது** : தொலைந்து போன தந்தையின் கழுதைகளை தேடிப்போன சவுல், இஸ்ரவேல் அனைத்தின் மீது முதல் வேந்தனாவான். தேவன் அவனிடம், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான

எல்லாவற்றையும் சங்கரித்து, சகல மிருக ஜீவன்களையும் கொன்று போடு என்று கட்டளை கொடுத்தார். (I சாமு 15:3) ஆனால், அவனோ ஜனங்களின் சொல் கேட்டேன் சாபத் தீடானதில் கொழுமையானதை நான் தேவனுக்கு பலியிடும்படியாக பிடித்துக்கொண்டு வந்தேன் என்று கீசின் குமாரன் தன் கீர்த்தி குறைய சொன்னான். அப்பொழுது தான் சாமுவேல், **"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?"** என்று கொதித்தெழுந்து கொற்றவனிடம் கேட்கிறார் சாமுவேல்.

எனக்கன்பான வாலிபனே, இன்றைய மார்க்க உலகை அப்படியே சிந்தித்துப் பார், கர்த்தர் கட்டளையிடாததையும், கர்த்தர் வேண்டாம் என்று சொன்னதையும் தங்கள் கைகளில் ஏந்தி, இது எங்கள் மனதிற்கு சாந்தி என்று சொல்லி, நாங்கள் இதனால் தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம் என்கிறார்கள். ஆனால் சாமுவேல் சொல்லுவதை கேளுங்கள், **"பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்"** (I சாமு 15:22) பலியும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தையும் நாம் இன்று செலுத்தவில்லை என்ற போதிலும், அது நாம் செய்யும் வீணாண ஆராதனைக்கு சமம், நமது இருதயம் அதிலிருந்து தூரமாயிருந்தால். ஆகவே, நாம் இந்த பருவத்திலே தேவனுக்கு கீழ்ப்படிவது முக்கியம், நமது விருப்பம் முக்கியமல்ல என்பதையும் அறிய வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதுகையில், "... எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (6:16) என்கிறார். வாலிபப் பருவத்திலிருக்கும் நாம் இதையும் புரிந்து கொள்ள வேண்டும். சிலர் யாருக்கும் நான் அடிமையல்ல என்பார்கள், ஆனால், தங்கள் மாம்ச இச்சையின்படி நடப்பார்கள். எனக்கன்பானவர்களே! ஒன்று நாம் தேவன் சொல்லுகிறதை செய்வதின் மூலம் தேவனுக்கு அடிமை. அப்படிச் செய்யாமலிருந்தால் நமக்கடிமை, மாம்சத்திற்கு அடிமை, சாத்தானுக்கடிமை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. நமது ஆண்டவராகிய இயேசுவைப்பாருங்கள். அவர் சிலுவையின் மரண பரியந்தம் தம் பிதாவுக்கு கீழ்ப்படிந்தவராகி தம்மை தாமே தாழ்த்தினார் (பிலி 2:8) நாமும் கூட இதே அடிச்சுவடைப் பின்பற்றி நாம் நம்மை தேவனுக்கு கீழ்ப்படுத்துவோம் அவருக்குப் பிரியமாக நடப்போம்.

**இரண்டாவதாக** : தேவனிடத்தில் ஞான விண்ணப்பம் செய்து, அவனுக்கு முன் இருந்தவர்களிலும் அதிகமாகவும் அவனுக்கு பின் எழும்புபவர்களிலும் ஒருவனும் பெறக்கூடாததுமான ஞான வரத்தை சர்வவல்லவரிடமிருந்து ஈவாக பெற்றுக்கொண்ட சாலொமோன் கூறுகையில் "துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; **செம்மையான வர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்"**. (நீதி 15:8) என்கிறார். தன்

சொல்படி கேட்கிற பிள்ளை தன்னோடு பேசும்போது எப்படி ஒரு தந்தை அளப்பறியா களிப்படைவானோ, அது போல, தன்னுடைய செம்மையான வார்த்தையின்படி நடக்கிற உத்தமர்கள் தேவனிடம் இயேசுவின் மூலமாக பேசும்போதும், தேவன் எல்லையில்லா மகிழ்ச்சி கொள்கிறார்.

இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தில் குடியேறின பிறகு காலங்கள் உருண்டோடியது. மக்கள் பல பாவ பழக்க வழக்கங்களில் தங்களை ஈடுபடுத்தினார்கள். ஆகவே, தேவன் அவர்களை அடிமைத்தனத்திற்கு ஒப்புக்கொடுத்தார். அப்படி அடிமையாகப் போன ராஜ குலத்தானும், துரை மகனுமாயிருந்த தானியேல் கொற்றவனின் போஜனம் வேண்டாம் என்றான். அது மாத்திரமா, விண்ணை நோக்க நீ ஜெபிக்கக்கூடாது என்ற கட்டளை வேறு. கட்டளையால் கட்டப்பட்டானா தானியேல்? இல்லை, இவன் தேவன் பேரில் வைத்த அன்பு கட்டுக்கடங்காமல் அல்லவாயிருந்தது. ஆகவே இவன் எருசலேம் நோக்கி ஜெபிப்பதை நிறுத்தவில்லை. அப்படிப்பட்டவனைத்தான் தேவன், **பிரியமானவனே என்று அழைக்கிறார்** (தானி 9:23; 10:11)

இஸ்ரவேலின் இனிமையான பாடகனாகிய சங்கீதக்காரன் விளம்புவதை நாம் கவனிக்க வேண்டும், "கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது" (சங். 11:7) தேவன் நம்மை உண்டாக்கும் போது செம்மையானவனாகத்தான் உண்டாக்கினார். நாம் தான் அநேக உபாயத் தந்திரங்களை தெரிந்து கொண்டோம் (பிரசங்கி 7:29) இளைஞர்களாகிய நமக்கு நான் செம்மையாவது எப்படி என்ற கேள்வி எழும்பலாம், சங்கீதக்காரன் செப்புவதை கேளுங்கள், "கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும் இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது ..." (சங் 19:8) என்கிறார். ஆகவே நாம் செம்மையான அவரது வசனத்தின்படி நடக்க வேண்டும்.

எனக்கன்பான வாலிபர்களே, நீங்கள் இரட்சிக்கப்பட்டு செம்மையானவன் என்ற நிலையை அடையவேண்டுமென்றால், தேவனையும், அவரது அன்பின் குமாரனையும் பற்றி கேள்விப்பட வேண்டும் (ரோ. 10:17) பின்பு அவர்களை விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6) கடந்த கால பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் (II கொரி 7:10) இயேசுவை தேவ சுதனென்று அறிக்கை செய்ய் வேண்டும் (அப். 8:37) பாவ மன்னிப்புக்காக, பாவங்கள் கழுவப்பட திருமுழுக்குப் பெற வேண்டும் (அப் 22:16) இப்படி நீங்கள் செய்தால் செம்மையானவர்களாவீர்கள், தேவன் தனது சபையில் உங்களை சேர்த்துக்கொள்வார். தொடர்ந்து அந்த நிலையில் நிலைத்திருந்தால் நித்திய ஜீவனுண்டு என்பதுறுதி. நீங்கள் இப்படிச் செய்ய தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென் !

**ஜே. பிக்கின்ஸ்**



# என்றும் அழியாத ராஜ்ஜியம்

சிறுவர் பகுதி

சிறுபிள்ளைகளாகிய உங்களை மீண்டும் சிறுவர் பகுதியின் மூலமாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் தொடர்ந்து இந்தப் பகுதியைப் படித்து பயனடைந்து வருவீர்கள் என நம்புகிறேன். இந்த மாதம் நான் உங்களோடு கூட சேர்ந்து கிறிஸ்துவுக்குள்ளாக நம்முடைய நிலை இச்சிறுவயதில் எப்படி இருக்க வேண்டும் என அலசி பார்க்கப் போகிறோம்.

“போர்” என்று சொன்னாலே நமக்கு விறுவிறுப்பும், ஆர்வமும் வந்து சேரும் அப்படித்தானே? நம்முடைய வேதத்தில் அநேக போர்களைப் பற்றி நாம் வாசித்திருப்போம். கேட்டுமிருப்போம். அப்படிப்பட்ட போர்களை வாசிக்கும் போது நாம் மகிழ்ச்சியடைகிறோம். அப்படித்தானே ! அப்படி போர்கள் நடந்த நாட்கள் தான் வேதாகமத்தில் விறுவிறுப்பான காலம் என்று கூட நாம் சொல்லலாம். எப்பொழுதும் ஒரு போர் இருந்து கொண்டே தான் இருக்கிறது. பாருங்களேன் ! .. சவுல் ராஜா அமலேக்கியரோடே போர் செய்தான். மேலும் தாவீது பெலிஸ்தரோடும், சாலமோன் ராஜா தன் நாட்டின் எல்லையை காக்கும்படியாக போர் செய்தார்கள். இப்படி பல போர்களை நாம் வேதத்தில் காண்கிறோம். அப்படிப்பட்ட காலங்களை நாம் நினைப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது. அப்படித்தானே ! நாம் யாரும் போர் நடக்கும் இடங்களில் வாழ்ந்ததில்லை. அந்த காலம் முடிந்தது ... ! நாம் அப்படி நினைப்பது சரியா? இல்லை. நாம் ஒரு ராஜ்ஜியத்தில் வாழ்ந்து வருகிறோம். அதிலே நாம் தினமும் போர் செய்து கொண்டிருக்கிறோம். இதை அறிவீர்களா? அறிந்து கொள்ளுங்கள்.

தீர்க்கதரிசிகளின் காலத்தில், தீர்க்கதரிசிகள் ஒரு சிலர் ராஜ்ஜியத்தை குறித்து முன்னுரைத்தனர். அவர்கள் அந்த ராஜ்ஜியத்தை பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் தெரியுமா? அது இந்த பூமியிலுள்ள எல்லா ராஜ்ஜியங்களை காட்டிலும் பெரியதும், வல்லமையுமான ஒரு ராஜ்ஜியம் என்றும் அது மற்ற ராஜ்ஜியங்களை போல் இல்லாதபடி, ஒரு ஆவிக்குரிய ராஜ்ஜியமாய் விளங்கும் என்றும் முன்னுரைத்தார்கள். சரி, அந்த தீர்க்கதரிசிகள் சொன்னதெல்லாம் நிறைவேறியதா? ஆம் அவை நிறைவேறின.

இயேசு பூமியில் இருந்த போது வரப்போகிற அந்த இராஜ்ஜியத்தை பற்றி அடிக்கடி பேசினார். அது வல்லமையோடே வரும் என்று தம்

சீஷர்களுக்குக் கூறினார். (மாற் 9:11) அந்த வல்லமை பரிசுத்த ஆவியோடே வரும் (அப் 1:8) என்றும் கூறினார். நாம் அப்போஸ்தலரிலே படிக்கிறபடி அது பெந்தெகொஸ்தே நாளிலே வந்தது (அப் : 2)

ஆக இயேசுவாலும், தீர்க்கதரிசிகளாலும் கூறப்பட்ட ராஜ்ஜியம் அந்த நாளிலே ஸ்தாபிக்கப்பட்டது. அந்த ஆவிக்குரிய ராஜ்ஜியம் இன்னும் இருக்கிறது அது நாம் இப்பொழுது கூறுகின்ற “சபை”யே ஆகும். (தானி 2:44) ல் சொன்னபடி அது அழியாத ஒரு ராஜ்ஜியம் ஆகும்.



சரி, இப்பொழுது நாம் பாடத்திற்கு வருவோம். நான் உங்களுக்கு முன்னே சொன்னேன் அல்லவா? நாம் போர் செய்கிறோமென்று, அதை நினைத்து கொள்ளுங்கள். இப்பொழுது பூமியில் இரண்டு ராஜ்ஜியங்கள் இருக்கின்றன. ஒன்று உண்மையையும், நல்லதையும் செய்யும் தேவனுடைய ராஜ்ஜியம். மற்றொன்று இருளையும், பொல்லாப்பையும் விரும்பும்

பிசாசின் ராஜ்ஜியம். ஒளிக்கும், இருளுக்கும் உள்ள உறவை போல் முற்றிலும் அந்த ராஜ்ஜியங்கள் ஒன்றுக்கொன்று வேறானவை. அவை இரண்டும் எப்போதும் போர் செய்து கொண்டே இருக்கின்றன. நீங்கள் உங்கள் நண்பர்களுக்கோ பிறருக்கோ இயேசுவைப் பற்றி கூறும் போது சாத்தானுக்குரிய இருளின் இராஜ்ஜியத்திற்கு எதிராய் போர் செய்கிறீர்கள். நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் படையிலே போர் வீரர்களாக இருக்கிறோம். எனவே நீங்கள் தேவனுடைய சேனையில் வீரராய் இருக்கிறோமென்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் இருளின் அதிகாரத்தை முறியடிக்கும்படி தேவன் உங்களை தேடுகிறார்.

நீங்கள் கடுமையாக உழைத்து அவருடைய சேனையில் நீங்கள் ஒரு வெற்றி வீரராக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்.

சரி, எப்படி இதை செய்யமுடியும் ! ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். இந்த சிறுவயதிலேயே தேவனுடைய சேவகராயிருக்கிற உங்களுக்கு அவர் எண்ணற்ற ஆசீர்வாதம் பொழிவார்.

நீங்கள் உங்கள் உறவினர்களோடும் விசேஷமாக பள்ளிகளில் நண்பர்களோடே இயேசுவைப் பற்றி கூறுங்கள். உங்கள் நல் நடத்தையின் மூலம் உங்கள் நண்பர்களை இயேசுவின் பக்கம் திருப்புங்கள். தேவனுக்கு பிரியமானதை செய்யுங்கள். இதைத்தானே தேவன் உங்களிடம் எதிர்பார்க்கிறார்.

இந்த கல்வியாண்டில் நல்ல மாணவர்களாகவும், தேவனுக்கு ஏற்ற போர் வீரர்களாகவும் இருப்பீர்களானால் அவர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார். ஏனென்றால் அவர் தான் சொல்லியிருக்கிறாரே "சிறு பிள்ளைகள் என்னிடம் வர தடை பண்ணாதீர்கள் என்று" !

கர்த்தருக்குச் சித்தமானால், உங்களை அடுத்த மாதம் சந்திக்கிறேன் ! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக !

*R. Abel Rodger Nayagam*

## நான்கு வகையான ஆராதனை

| | |
|---|---|
| *வீணான ஆராதனை.* | *மத். 15:9* |
| *அறியாமல் செய்யும் ஆராதனை.* | *அப். 12:23* |
| *சுய இஷ்டமான ஆராதனை.* | *கொலோ 2: 20-23* |
| *உண்மையான ஆராதனை.* | *யோ 4:23,24* |

# விசுவாசத்தின் அடிப்படைகள்

உங்களுக்கும் எனக்கும் பாவத்தினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தேவனுடைய பதில் இயேசு தான் என்று வேத வசனங்களிலிருந்து கற்றுக்கொண்டோம். அந்த உண்மையை மனதில் கொண்டு நமக்குள் அநேக கேள்விகள் எழும்புவது இயற்கைதானே!

மனிதனுடைய பாவத்தினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தேவனுடைய பதில் இயேசுவாக இருப்பதினால், கிறிஸ்தவர்களுக்கு இயேசு என்ன அர்த்தமாகிறார்? நம்மிடத்தில் அவருடைய உறவு என்ன? அவரிடத்தில் நம்முடைய உறவு என்ன?

<u>முதலாவது இயேசு தேவனாயிருக்கிறார்</u>

யோவான் 1:1-3,14 ல் நாம் வாசிக்கும் போது ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம் என்று நாம் வாசிக்கிறோம், இந்த வசனத்தில் மாம்சமான அந்த வார்த்தை இயேசுதான் என்று நமக்கு தெளிவாகிறது. ஆதலால் இயேசு தேவனாயிருக்கிறார். தேவத்துவத்துக்கு அவசியமான குணாதிசயங்கள் அவரிடம் இருக்கிறது.

யோவான் 20:26-28 யை வாசியுங்கள். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு தோமாவுக்கும், மற்றவர்களுக்கும் தரிசனமானார். தோமா இயேசுவினுடைய கரங்களிலும், விலாவிலும் உள்ள காயங்களைக் கண்ட போது என் ஆண்டவரே, என் தேவனே என்றான். அவன் கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அடையாளம் கண்டு கொண்டான்.

இயேசு தேவன் என்கிற உண்மை எதனால் முக்கியமானது? ஒரு காரணம் இயேசு தேவனல்ல என சொல்லிக் கொண்டிருக்கும் கள்ளப் போதகர்களின் கூற்றைப் பொய் என நிரூபிப்பதற்கு, இரண்டாவது இயேசு நமது கர்த்தர், கிறிஸ்து.

அப்போஸ்தலர் 2:36 யை நாம் வாசிக்கும் போது தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுரு நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினாரென்றும் தைரியமாக சொன்னான்.

"குரியோஸ்" என்ற கிரேக்க பதத்திலிருந்து ஆண்டவர், அல்லது கர்த்தர் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இன்னும் விளக்கமாக அதிகாரத்தையுடைய எஜமான், எந்தச் சூழ்நிலையிலும் சேவை செய்யப்படத் தக்கவர் என பொருள்படும். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் எஜமானாகிய இயேசுவுக்கு வேலைக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். உதாரணமாக யாக் 1:1 யை வாசிக்கும்போது "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு என்று அவர் தன்னை அடையாளர் காட்டிக் கொள்கிறார்". பிலிப் 1:1 ல் நாம் வாசிக்கும் போது பவுல் சொல்கிறார். தானும், தீமோத்தேயும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்று. இது உங்களுக்கும் எனக்கும் எப்படிப் பொருள்படுகிறது? அதாவது நாம் நம்மை முற்றிலுமாய் இயேசுவினுடைய சித்தத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். எபே 6:4-8 ல் நாம் கிறிஸ்தவர்களாக "கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக" இருக்கிறோம். கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின் படி செய்ய வேண்டும். ஒருவர் செய்யும் எந்த ஒரு நன்மையான காரியத்துக்கும் நம்முடைய கர்த்தரிடத்திலிருந்து நன்மையை பெறுவான். நாம் நன்மை செய்வதினால் நம்முடைய எஜமானைப் பிரியப்படுத்தும் உண்மையுள்ள முயற்சிகளுக்கு நம் ஆண்டவர் நிச்சயமாக பலனளிப்பார்.

இயேசு எப்படி நம் எஜமானாக இருக்கும் உரிமையை சம்பாதித்தார்? எபேசியர் 5:2 யை வாசியுங்கள். கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்தார். இப்படி ஒரு பயங்கரமான கிரயத்தை செலுத்தி இயேசு கிறிஸ்து நமக்கு எஜமானாகினார்.

தீத்து 2:14 ல் நாம் வாசிக்கும் போது நம்மை மீட்பதற்காக இயேசு தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். மீட்பது என்பது அடிமைத்தனத்திலிருந்து அதற்குரிய கிரயத்தைக் கொடுத்து திரும்பவும் வாங்குதல் என பொருள்படும்.

ரோமர் 6:17,18 யை வாசியுங்கள். இயேசுவிடம் மனம் மாறுவதற்கு முன்பு பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம். ஆனால் இயேசு தம்மைத் தாமே கிருபாதார பலியாக ஒப்புக் கொடுத்து நம்மை மீட்டார். அதன் பிறகு, அவருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற பிறகு நாம் நீதிக்கு அடிமைகளானோம். (ரோ 6:3,4) நாம் எஜமான்களை மாற்றி விட்டோம். நம்முடைய பழைய எஜமானாகிய சாத்தான், பாவத்திலிருந்து திரும்பி நமது புதிய எஜமானாகிய இயேசுவினிடத்திற்கும், அவர் புதிய ஏற்பாட்டில் கட்டளையிட்டிருக்கிற நீதியான வாழ்க்கைக்கும் திரும்பி விட்டோம்.

மேலும் தீத்து 2:14 ல் நாம் வாசிக்கும் போது அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளை செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும் படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறோம். எனவே நாம் புதிய ஏற்பாட்டிலே அவர் நமக்கு கட்டளையிட்டிருக்கிற நற்கிரியைகளைச் செய்து நாம் சந்தோஷமாக அவருக்கு சேவை செய்வோம்.

II கொரி 6:1,20 யை வாசியுங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிரயத்துக்கு வாங்கப்பட்டிருக்கிறான். ஆதலால் நாம் நம்முடையவர்களல்ல, நாம் நம்முடைய எஜமானாகிய இயேசுவினுடையவர்கள். அவர் நம்மை தம்மையே ஒப்புக் கொடுத்து வாங்கியிருக்கிறார். தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு என்ன முடிவுக்கு வந்திருக்கிறார்? ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய நாம் ஆவியினாலும், சரீரத்தினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்கிறார்.

இயேசு நமக்கு கர்த்தராக எஜமானாக இருக்கிறார். ஆனால் அப் 2:36ல் பேதுரு சொல்லும் போது ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று சொல்கிறார். **"Christos"** என்ற கிரேக்க பதத்திலிருந்து கிறிஸ்து என தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. "கிறிஸ்து" என்பதற்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். எபிரெய பாஷையில் "மேசியா" என்ற பதம் உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த "மேசியா" என்ற பதத்தை அடிக்கடி ராஜாக்களைக் குறிப்பதற்கு பயன்படுத்தி வந்தார்கள். அதன் பிறகு தங்களையும், தங்கள் தேசத்தையும், இரட்சிக்க வரப்போகும் ராஜாவை குறிப்பதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற பதத்தை யூதர்கள் உபயோகப்படுத்தினார்கள். தெளிவாக அந்த ராஜா இயேசு தான்.

ஆகவே இயேசு நம்முடைய ராஜாவாக இருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 17:14 ல் உண்மையாகவே கர்த்தாதிக் கர்த்தரும், ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார். அவருடைய ஆத்மீக ராஜ்யமாகிய சபையை ஆட்சி செய்கிறார். (எபே 1:28,23) இயேசு ராஜாவாகயிருப்பதால் நாம் அவருக்கு கீழ்ப்படிபவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தது இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிறார். எபிரெயர் 2:17, 18 ல் தேவனால் ஏவப்பட்ட ஆசிரியர் சொல்லும்போது நம்முடைய கர்த்தராகிய இயேசு நம்மைப் போல, மனித ரூபமெடுத்தார். இன்னொரு காரணம் அவர் உண்மையுள்ள பிரதான ஆசாரியராகவும்,

இரக்கம் நிறைந்தவருமாயிருக்க அப்படி மனித ரூபமானார். இப்படிப்பட்ட இரக்கம் நிறைந்த, உண்மையுள்ள பிரதான ஆசாரியரை நாம் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய மகிழ்ச்சி ! எவ்வளவு பெரிய சிலாக்கியம்!!

எபிரெயர் 4:14-16 யை வாசியுங்கள். தேவனால் ஏவப்பட்ட எபிரெய ஆசிரியர் இயேசுவைப் பற்றி ஆத்துமாவைத் தட்டியெழுப்பக் கூடிய வசனங்களை சொல்கிறார். முதலாவது, இயேசு ஒரு பிரதான ஆசாரியர் மாத்திரமல்ல. அவர் மகா பிரதான ஆசாரியராவார் ! உண்மையில் அவருக்கு ஒப்பானவர் யாருமில்லை. இரண்டாவது, இயேசு வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போனார். இதைப் பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியர்கள் யாரும் செய்யவில்லை. மூன்றாவது, நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். நான்காவது, உங்களையும் என்னையும் போல் அவரும் சோதிக்கப்பட்டார். ஆனால், அவர் சோதனைக்கு இணங்கவில்லை, அவர் பாவம் செய்யவில்லை, பாவம் செய்யாத பிரதான ஆசாரியர் இயேசு ஒருவரே அப்படிப்பட்ட பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்.

இந்த ஆத்துமாவைத் தட்டியெழுப்புகின்ற உந்தும் சக்தியாக உள்ள உண்மைகளை அடிப்படையாக் கொண்டு தேவன் என்ன முடிவுரை அளிக்கிறார். முதலாவது நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம். நாம் நம்முடைய மகா பிரதான ஆசாரியருக்கும் அவரில் நாம் செய்த விசுவாச அறிக்கைக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது நாம் கிருபாசனத்தண்டையில் தைரியமாய் நாம் வரமுடியும், அதாவது தேவனை நாம் ஜெபத்தில் விசுவாசத்துடன் அணுக முடியும். அது மாத்திரமல்ல. நெருக்கடியான சமயங்களில் இரக்கத்தையும், கிருபையையும் விலையேறப்பெற்ற ஜெபத்தின் மூலமாக நாம் பெற்றுக் கொள்ள முடியும். இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என சிந்தித்துப் பாருங்கள். பிரியமானவர்களே !

எபிரெயர் 7:23,24 யை வாசியுங்கள். நம்முடைய பிரதான ஆசாரியர் எவ்வளவு பெரியவராயிருக்கிறார்? அவருடைய ஆசாரியத்துவம் மாறாததும், என்றென்றும் நிலைக்கக்கூடியதுமாய் இருக்கிறது.

எபிரெயர் 8:1 ல் நாம் வாசிக்கும் போது இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார். அவர் வல்லமையையும், அதிகாரத்தையும் உடையவராயிருக்கிறார்.

எபிரெயர் 9:12,24 யை வாசியுங்கள். இயேசு ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே (பரலோகம்) பிரவேசித்திருக்கிறார். வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல. தம்முடைய சொந்த இரத்தத்தினால் அப்படி செய்தார். அதனால் அவருக்கு கீழ்ப்படிபவர்களுக் கெல்லாம் நித்திய மீட்பை உண்டு பண்ணினார். மேலும், இப்போது அவர் ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்தவனுக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகிறார்.

எபிரெயர் 10:18-24 யை வாசியுங்கள். இயேசு உங்களுடைய பாவத்திற்காகவும், என்னுடைய பாவத்திற்காகவும் ஒரே தரம் பலியானார், அது ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனுக்கு பரிசுத்த ஸ்தலத்தில் (பரலோகத்தில்) இயேசுவின் இரத்தம் மூலமாக பிரவேசிப்பதற்கு தைரியத்தை கொடுக்கிறது. அது மாத்திரமல்ல. இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறபடியால் நாம் உண்மையான இருதயத்தோடும், முழு விசுவாச உறுதியோடும் தேவனிடத்தில் கிட்டிச் சேரமுடியும். மேற்சொன்ன காரியங்கள் எல்லாம் உண்மையாயிருப்பதால் எந்த வித அசைவுமில்லாமல் நம்முடைய விசுவாசத்தின் அறிக்கையை உறுதியாக பற்றிக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை செய்கிற நம்முடைய தேவன் உண்மையுள்ளவர் என்பதை நினைவில் கொண்டால் அதை சுலபமாக செய்ய முடியும்.

இயேசுவை நேசிக்கிற, அவருக்கு கீழ்ப்படிகிற ஒவ்வொருவருக்கும் இயேசு மகா பெரிய, இரக்கமுள்ள, உண்மையுள்ள என்றும் ஜீவிக்கின்ற மகா பிரதான ஆசாரியர் என்பது ஒரு பெரிய ஊக்கமும், உற்சாகமுமாகும். IIபேதுரு 2:5,9 ன் படி ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்தவனும் ஒரு ஆசாரியனாகும். ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் இருக்கிறான். எனவே நாம் தேவனுக்குப் பிரியமான ஆத்மீக பலிகளை நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு மூலமாக நாம் தேவனுக்கு செலுத்த முடியும். இந்த உலகத்தில் உள்ள எந்த மனிதன் மூலமாயும் அல்ல.

இந்த வழிகளிலெல்லாம் இயேசுவோடு ஐக்கியப்படுவது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! இந்த ஆசீர்வாதங்களுக்காய் நாம் தேவனுக்க நன்றி செலுத்துவோம், ஸ்தோத்திரம் செலுத்துவோம் ! உண்மையுள்ள அன்பான கீழ்ப்படிதல் மூலமாய் நமது அன்பான எஜமானுக்கு நாம் நன்றி செலுத்துவோம் !

*Benny* *Charlie DiPalma*

# வேதனைக்கு மருந்து வேதம்

மனவேதனையில் ஒருவருக்கு நம்பிக்கை தருவது வேதம் மட்டுமே. காரணம் அது தேவனுடைய ஆலோசனைகளை உள்ளடக்கிய பொக்கிஷமாக உள்ளது. இவ்வுலகில் தற்கொலைக்கான காரணங்கள்; ஒருவரின் தனிமை. அதாவது தன்னை நேசிக்க ஒருவருமில்லை என்று எண்ணுவது, பொருளாதார குறை, திடீர் பொருள் இழப்பு, நஷ்டம், விரும்பிய பெண்ணை மணக்க முடியாமை, தாங்க முடியாத அவமானங்கள், கல்வியில் தோல்வி, கடன் தொல்லை, தவறான உறவு முறைகள் மற்றும் செய்த குற்றங்கள் மனதை அரித்தல் போன்ற அநேகக் காரியங்களை சொல்லலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிதானமாக யோசித்து செயல்பட வேண்டும் என்று மற்றவர் ஆலோசனை கூறுவர். ஆனால் நிதானமாக செயல்பட மனிதனால் முடியாது. மனுஷருக்கு செம்மையாய் தோன்றும் வழிகள் உண்டு, அதன் முடிவோ மரண வழிகள் என்று வேதம் சொல்கிறது. எனவே நாம் நம்முடைய சுயபுத்தியின் மேல் சாய்ந்து தேவனை விட்டு பிரியக்கூடாது. நாம் ஆரம்பத்தில் பார்த்த சூழ்நிலைகளில் வேதம் தரும் நம்பிக்கையைப் பார்ப்போம்.

தன்னை நேசிக்க ஒருவருமில்லை என்று எண்ணுவது பிசாசின் தந்திரமான போதனையாகும். நாம் நேசத்தை உணர வேண்டும் என்பதற்காகத்தானே தேவன் குடும்பத்தை ஏற்படுத்தினார். கணவன் மனைவியை நேசிக்க வேண்டும். மனைவி புருஷனுக்கு கீழ்ப்படிய வேண்டும் மற்றும் பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் முதியவருக்கும் கீழ்ப்படிய வேண்டும் போன்ற சத்தியங்களை கைக்கொள்ளும்போது நல்ல குடும்பம் அமைகிறது. பிள்ளைகளுக்கு நேசம் கிடைக்கிறது. ஒருவேளை தகப்பனும், தாயும் கைவிட்டாலும் நம் தேவனுடைய நேசம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்று சங்கீதம் 27:10 ல் காண்கிறோம். வாலிப வயதில் பெற்றோரின் நேசம் திகட்டி உலக சிநேகிதத்தை அவன் எதிர்பார்க்கிறான். சில காலம் அதில் களிகூர்ந்தாலும் அது மாயை என்றும், எதிர்பாரா அதிர்ச்சியும், துரோகங்களும் நிறைந்தது என்றும் காண்கின்றான். அந்நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் வேதம் (பிர 11:9-10, பிர 12:1,13,14) வாலிப வயதில் சந்தோஷமாயிரு. ஆனால் எதன் அடிப்படையில் அந்த மகிழ்ச்சி என்று தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என போதிக்கின்றது. ஆகவே மதுபானம், பிறரை பரியாசம்

செய்தல், பணத்தேவைக்காக பொய் மற்றும் திருடு, தவறான பெண் சிநேகிதங்கள் (விபச்சாரம்) போன்றவற்றை வேதம் கண்டிக்கிறது.

தனிமை மற்றும் என்னை நேசிக்க ஆள் இல்லை என நினைப்பவர்களைப் பார்த்து வேதம் சொல்கிறது; தேவன் உன்னை உன் தாயின் வயிற்றிலேயே தெரிந்து கொண்டார். (ஏசா 46:3-4) மற்றும் சங் 139, அதி 13,14 ல் நம்முடைய சரீரம் நாம் தேவனால் பெற்றுக்கொண்டதால் அவருக்கு துதி செலுத்த வேண்டும் என்று கூறுகிறது. ஆனால், சிலர் அதை எண்ணுவதில்லை. மேலும் நம் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது. அதைக்கெடுக்க நமக்கு அதிகாரமில்லை, தேவன் தண்டிப்பார் என்று I கொரி 3:16-17 ல் காண்கிறோம்.

ஆகவே, இப்படிப்பட்டவர்கள் தங்களை நேசிக்க தேவன் ஒருவர் உண்டு என உணர வேண்டும். அவர் தம் மகனையே எனக்காகத் தந்தார் என்றும் உணர்ந்து அவரிடம் அன்பு செலுத்த வேண்டும். மற்ற மனிதரிடமும் அன்பு செலுத்த வேண்டும் என கிறிஸ்து போதித்தார் (மத் 22:37-39). ஆகவே நாம் தான் முதலில் நேசிக்க வேண்டுமே தவிர நேசத்தை மற்றவரிடம் எதிர்பார்ப்பது சரியல்ல என்கிறது வேதம். அப்போது தான் எப்போதும் சந்தோஷமாயிருக்க முடியும் (பிலி 4:4-7)

மேலும் வேதம் சொல்கிறது; ஒருவர் தம் வாழ்வில் முதலிடம் தேவனுக்குக் கொடுக்க வேண்டும். சிலர் சிநேகிதர், பணம், உறவு முறைகள் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேதனைப்படுவார்கள். ஆனால் தேவனுக்கும் அவருடைய வேதத்திற்கும் முக்கியத்துவம் தந்து வாழ ஆரம்பித்தால் வேதனை நீங்கி உள்ளத்தில் சமாதானம் நிரம்பும். அடுத்ததாக பொருளாதாரம், நம்மில் அநேகரை வாட்டும் சாத்தானின் கருவியாக இருக்கிறது. அதை நாடித் தேடுபவர்கள் அஞ்ஞானிகள் என வேதம் சொல்லியும் கீழ்ப்படியாமல் அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக்கொள்கிறார்கள் எனப் பார்க்கிறோம் (I தீமோ 6:6-12) மற்றவரிடம் பகிர்ந்து கொடுக்க மனதில்லாமல் இயேசுவை விட்டு துக்கத்தோடு போன ஒரு வாலிப ஐசுவரியவானை நாம் அறிவோம்.

பவுல், வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது உண்ணவும், உடுக்கவும் உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம் என்கிறார். ஆனால் பலர் பணவசதி குறைவாயிருப்பவர்களை பிழைக்கத் தெரியாத முட்டாள் என்றும், வசதியாய் இருப்பவர்கள் புத்திசாலிகள் என்றும் சொல்கிறார்கள். அப்படி சொல்லுபவர் நியாய தீர்ப்பில் தலைகுனிவார்கள். இந்த உலக வாழ்வில் மனிதர் வீண் கவுரவத்திற்காகவும், பெருமைக்காகவும் வாழ முற்பட்டு கடன்காரர்களாய் மாறி கடைசியில் இயேசு கடன் தொல்லையில் இருந்து விடுதலை தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியன தேவனால் உண்டாகாமல், உலகத்தால் உண்டாயிருக்கிறது (I யோ 2:15-17)


ஏழ்மை ஒரு அசிங்கமல்ல, ஏழையை உண்டாக்கியவர் தேவன் தான் என்கிறது வேதம் (நீதி 17:5) தேவனுடைய அன்பு தரித்திரருக்கு இயேசுவாலும், அப்போஸ்தலராலும் பிரசங்கிக்கப்பட்டு இன்னும் அது தொடர்கிறது. எனவே ஏழ்மை ஒரு சாபமாக நினைக்கும் மனோப்பாவம் நம்மில் நீங்க வேண்டும். தேவன் நம்மை விசுவாசத்தில் ஐசுவரியவான் களாக்க முயற்சிப்பதை அறிந்து நாம் சந்தோஷப்படுவோமாக.

பொருளாதார விஷயத்தில் திடீர் இழப்பு மனிதனை நிலைகுலையச் செய்கிறது. நாம் சோர்ந்து போகமலிருக்க தேவன் யோபுவைதான் நமக்கு மாதிரியாக வைத்துள்ளார். இதைக்குறித்து சமீபத்தில் ஏலகிரி முகாம் செய்தியில் விரிவாக அறிய தேவன் உதவினார்.

நீண்ட காலமாக தற்கொலை முயற்சியில் முக்கிய பங்கு வகிப்பது விரும்பிய துணையோடு வாழ முடியாமை: காரணம் வேதம் சொன்னபடி மனிதன் சிருஷ்டிகரை நினையாமல் சிருஷ்டியை (பெண்ணை) நினைத்து தன்னை கெடுத்துக் கொள்கிறான் (ரோ 1:25) தேவனை அறியாத இந்த உலகம் பெண் சிநேகிதத்தை முக்கியப்படுத்தி பத்திரிக்கை, திரையுலகம் போன்றவற்றால் வாலிபரைக் கெடுக்கின்றது. ஆனால் வேத வார்த்தையின் படி ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளான துணையோடு திருமணத்தில் இணைக்கப்பட வேண்டும். மனைவியை கண்டடையும் போது பண வசதி மட்டும் பார்ப்பதால் அநேக வேதனைகளை கிறிஸ்தவர்கள் சந்திக்கின்றனர். எனவே பின்னானவைகளை மறந்து தேவனுக்குரிய முன்னானவைகளை நாடித் தொடருவோம் (பிலி 3:13,14)

கடைசியாக அவமானங்கள். பல வழிகளில் வருகிறது. சிலர் தற்கொலை செய்து கொள்ளுமளவு கூட இது செல்கிறது. அப்போது தன்னைப் பற்றி மட்டும் சிந்தியாமல் இதைக்காட்டிலும் எனக்காக அவமானப்பட்ட ஒருவர் இயேசு (எபி 12:2 ; I பேது 2:19-21) இருக்கிறார் என நினைக்கும் போது நமது அவமானம் பெரிதாகப்படாது. இயேசுவைப் போல வாழ நம்மை அழைத்த தேவனுக்கும் அவருடைய வேதத்திற்கும் கீழ்ப்படிந்து வாழ்வோமாக. தேவனுக்கே மகிமை.

**K. பாண்டியன்**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

# ஓர் இனிய செய்தி


**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.



**ராஜ் டிவி யில்**
**திருமறை தியானம்**
பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணி

**தமிழன் டிவி யில்**
**திருமறை தியானம்**
பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணி



Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.

Design by: Sun, Kgm. Ph: 222555